24.02.2026 OS.No.63/2024 PW1 Name :.**கண்ணன்**

குறுக்கு விசாரணை

1. பிரதிவாதியிடம் நான் போட்டுள்ள கிரைய ஒப்பந்தத்திற்கான பணத்தை திரும்ப பெறுவதற்கான வழக்கு போட்டுள்ளேன். அது பதிவு செய்யபடாத ஒப்பந்தம் ஆகும். 30.04.2021ல் ஒப்பந்தம் போட்டேன். ஒப்பந்தம் போடுவதற்கு முன் வழக்கு சொத்தை பார்த்தேன். வழக்கு சொத்து ஆலங்காயம் கிராஸ் ரோட்டில் உள்ளது. அதன் சர்வே எண் தெரியாது. செக்குபந்தி ஆலங்காயம் ரோட்டிற்கு தெற்கிலும் வடக்குபார்த்தும் உள்ளது. புரோக்கர் மூலமாக சொத்தை பார்த்தேன். புரோக்கர்கள் மோகன், கிருஷ்ணமூர்த்தி ஆவார்கள்.
2. கயல்விழி பத்திர எழுத்தரிடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் வைத்து ஒப்பந்தம் எழுதபட்டது. அதில் சாட்சிகளாக கோகுல், கிருஷ்ணமூர்த்தி, மோகன் ஆகியோர்கள் கையெழுத்து போட்டார்கள். ஒப்பந்தம் எழுதும் போது சொத்தின் அசல் ஆவணங்களை கொடுக்கவில்லை. நகலை வைத்து தான் பத்திரம் எழுதபட்டது. ஒப்பந்த சமயத்தில் முன்பணம் ரூ.1,25,000/- கொடுத்தேன்.
3. தற்போது அந்த சொத்தின் மதிப்பு தெரியாது. நான் ரூ.31,25,000/-த்திற்கு சொத்தை கிரையம் பெற ஒப்பந்தம் போட்டேன். தற்போது அதன் மதிப்பு அதிகமாக போகும். சொத்தை கிரையம் பெறுவதற்கு தற்போது நான் தயாராக இல்லை. நான் ஒப்பந்தம் போடுவதற்கு முன் சொத்தை வங்கி அடமானத்தில் இருந்துள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. சொத்திற்கான வில்லங்கம் எதுவும் நான்

பார்க்கவில்லை. பின்னிட்டு நான் பிரதிவாதியிடம் சிறிதுசிறிதாக பணம் கொடுத்து இதுநாள் வரை ரூ.2,50,000/- முன்பணம் கொடுத்துள்ளேன்.

4. அது சம்மந்தமாக ஒப்பந்தத்தில் வரவு வைக்கபட்டுள்ளது. வங்கி அதிகாரிகள் சொத்தில் நோட்டீஸ் ஒட்டி சொத்தை வாங்ககூடாது என கூறியுள்ளார்கள். அதனால் நான் சொத்தை கிரையம் பெறவில்லை. எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்று தெரியவில்லை. காவல்நிலையத்தில் நான் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்று நியாபகம் இல்லை. பிரதிவாதி என்னிடம் வாங்கிய முன்பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 24/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.24 17:03:03 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.